பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 06 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக பதிலளிக்க தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் இரண்டு வாரகால அவகாசம் அளித்துள்ளது.
- விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் 17-வது தவணையாக 20 ஆயிரம் கோடி ரூபாயை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விடுவிக்கிறார்.
- தொல்லியல் துறை சார்பில் நடைபெறும் அகழாய்வுப் பணிகளை தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார்.
- தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 4 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.
- **WTA Veneto** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>>**

நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக பதிலளிக்க தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் இரண்டு வாரகால அவகாசம் அளித்துள்ளது.

பூஜ்யம் புள்ளி பூஜ்யம் ஒன்று சதவீதம் அளவிற்கு தவறு நடந்தாலும் அது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஒரு நபர் தவறு செய்திருந்தாலும் அது ஒட்டுமொத்த அமைப்பையே பாதிக்கும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

20 ஆயிரம் மாணவர்கள் இதுவரை புகார் அளித்துள்ளதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த புகார்கள் தொடர்பாக உரிய நேரத்தில் தேசிய தேர்வு முகமை விசாரணை நடத்தாதற்கு கண்டம் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை அடுத்த மாதம் 8-ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

**<<<<<<>>>>>>**

விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் 17-வது தவணையாக 20 ஆயிரம் கோடி ரூபாயை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விடுவிக்கிறார்.

வாரணாசியில் நடைபெறும் நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்கிறார்.

நாடு முழுவதும் 9 கோடியே 26 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் இதனால் பயனடைவார்கள்,

மேலும், 30 ஆயிரத்துக்கும் அதிகமான சுய உதவிக் குழுக்களுக்கு வேளாண் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களையும் பிரதமர் வழங்க உள்ளார்.

இதற்கிடையே காணொலி வாயிலாக நடைபெறும் இந்நிகழ்ச்சியில் தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் பகுதியில் மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் பங்கேற்கிறார்.

நாமக்கல்லில் நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய தொழிலாளர் நலன் மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே கலந்துகொள்கிறார்.

<<<<<<>>>>>>

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தலைமையில் ஜம்மு காஷ்மீரில் நடைபெறும் நெடுஞ்சாலைப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டம் துணைநிலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அப்போது பேசிய துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, ஜம்மு காஷ்மீரில் நடைபெற்றுவரும் பல்வேறு சாலைப்பணிகள் காரணமாக இந்த பகுதி வளர்ச்சிபெறும் என்று குறிப்பிட்டார்.

இதற்கு காரணமாக உள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரிக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீரில் நடைபெற்றுவரும் மிகப்பெரிய சாலைப்பணிகள் வேலைவாய்ப்புகளை வழங்குவதாகவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் உள்ளது என்று திரு மனோஜ் சின்ஹா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இந்தியாவின் நடப்பாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி ஏழு புள்ளி இரண்டு சதவீதமாக இருக்கும் என்று **Fitch** அமைப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஏழு சதவீதமாக இருக்கும் என்று இந்த அமைப்பு தெரிவித்திருந்தது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியாவின் பொருளாதாரம்  ஏழு புள்ளி இரண்டு சதவீதமாக வளர்ச்சியடையும் என்றும் தெரிவித்துள்ளது.

உலக பொருளாதார வளர்ச்சி என்பது இரண்டு புள்ளி ஆறு சதவீதமாக இருக்கும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலைமை சீரடைந்து வருவதும், சீனாவின் ஏற்றுமதி வளர்ச்சி பெற்று வருவதும் உலக பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை கொண்டுவருவதாக **Fitech** அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சிமி இயக்கத்தின் மீதான தடையை நீட்டிப்பது குறித்து தில்லி சட்டவிரோத செயல்கள் தடுப்பு தீர்ப்பாயம் நீலகிரி மாவட்டம் குன்னூரில் இரண்டு நாட்களுக்கு விசாரணை நடத்துகிறது.

இந்த விசாரணை குன்னூர் நகராட்சி மன்ற கூட்டரங்கில் இன்று காலை தொடங்கியது.

இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்தை ஒரு சட்டவிரோத இயக்கமாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்த கருத்துக்களை தெரிந்துகொள்வதற்கு, தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு புரசை சத்திர குமார் கௌரவ் தலைமையில் விசாரணை நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக மத்திய – மாநில அரசு வழக்கறிஞர்கள் வருகை தந்துள்ளனர்.

சிமி இயக்கம் குறித்து சாட்சியம் அளிக்க விரும்புகின்றவர்கள் உறுதிமொழி பத்திரங்களை குன்னூர் வந்துள்ள தில்லி நீதிமன்ற பதிவாளர் திரு ஜிதேந்திர பிரதாப் சிங்கிடம் வழங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும், நாளையும் நடைபெறும் இந்த விசாரணையின்போது குறுக்கு விசாரணை ஏதேனும் இருப்பின் அதற்காக நேரில் ஆஜராகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழக அரசின் தொல்லியல் துறை சார்பில் நடைபெறும் அகழாய்வுப்பணிகளை இன்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்'

*வாய்ஸ் பைட் - முருகன் - 40 செகண்ட்ஸ்)*

முன்னதாக, ராமானுஜர் என்ற தொலைக்காட்சித் தொடரின் நூலாக்கத்தை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

**<<<<<<>>>>>>**

தமிழகத்தில் பிளஸ் டூ பொதுத்தேர்வில் மறு கூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பெண் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

மதிப்பெண் மாற்றம் கேட்டு விண்ணப்பித்த தேர்வர்கள், மறு கூட்டலுக்கான பட்டியலை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களுக்கான விடைத்தாள்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை.

**<<<<<<>>>>>>**

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டிணத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது எல்லை தாண்டியதாகக் கூறி அவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து படகையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன் துறைமுகத்திற்கு அழைத்து செல்லப்படுகிறார்கள்.

இந்த மீனவர்களை விடுவிக்க மத்திய – மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**<<<<<<>>>>>>**

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sulliven**–னின் இந்திய பயணம் இரு நாடுகளுக்கு இடையே நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது பேசிய அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஒருங்கிணைப்பாளர் திரு ஜான் கிர்பி, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இரு நாடுகளுக்கு இடையே நட்புறவு நீடித்துவருவதாகவும் அதனை வலுப்படுத்தும் விதத்தில் திரு **Jake Sulliven**-னின் பயணம் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

**<<<<<<>>>>>>**

நாட்டின் வட மாநிலங்களில் இன்றும் தொடர்ந்து கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, இமாச்சலப்பிரதேசம், பீகார், உத்தராகண்ட், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் கடும் வெப்பம் நிலவக்கூடும் என்றும் கூறியுள்ளது.

இதற்கிடையே, அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு கன முதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்துள்ளது.

சென்னை புறநகர் பகுதிகளில் நேற்றிரவு முதல், இன்று காலை வரை இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது.

மீனம்பாக்கத்தில் 6 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி அருகே 11 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

அடுத்த இரு தினங்களுக்கு சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மழை பெய்வதற்கான வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**WTA Veneto** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர், செக் குடியரசின் டோமினிக்கா சல்கோவ-வை 7-5, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

**<<<<<<>>>>>>**

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், சூப்பர் எட்டு சுற்றில் விளையாடும் அணிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் நாளை தொடங்கி, 25-ஆம் தேதிவரை நடைபெற்றன.

இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் முதல் பிரிவிலும், அமெரிக்கா, இங்கிலாந்து, வெஸ்ட் இன்டீஸ், தென்னாப்பிரிக்கா ஆகிய அணிகள் இரண்டாவது பிரிவிலும் இடம்பெற்றுள்ளன.

**<<<<<<>>>>>>**

**Kaohsing** மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

தைவானில் நடைபெறும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ரகு மாரிசாமி - தைவானின் **Jhuo Fu Liao**-வையும், **Abhishek Yeligar -** தைவானின் **Cheng Han Tsai**-யையும், **'Siddhanth Gupta -** தைவானின் **Chi Ting Chen**-யையும் எதிர்கொள்கின்றனர்.

**<<<<<<>>>>>>**